**பத்திரிகை வெளியீடு**

கொழும்பு, 24 ஏப்ரல் 2017

Nestlé

Good Food, Good Life

## நெஸ்லே லங்கா தலைமை அலுவலகம் உத்தியோகத்தர்களுடன் புத்தாண்டுக் கொண்டாட்டம்

நெஸ்லே லங்கா நிறுவனம், அண்மையில் தனது தலைமை அலுவலக உத்தியோகத்தர்களுடன் அலுவலக வளாகத்தில் புத்தாண்டை வெகு சிறப்பாகக் கொண்டாடியுள்ளது. நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஷிவானி ஹெக்டே அவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார். மங்கள விளக்கேற்றல் மற்றும் பால் பொங்குதல் ஆகிய சம்பிரதாயங்களுடன் ஆரம்பித்த புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வில், புத்தாண்டு விளையாட்டுக்கள் மற்றும் பாரம்பரிய புத்தாண்டு காலையுணவு ஆகியனவும் இடம்பெற்றிருந்தன.

அறிமுகமானவர்கள் அல்லது நம்பிக்கையானவர்களுடன் கொடுக்கல்வாங்கல் சம்பிரதாயத்திற்கு அமைவாக, அனைத்து ஊழியர்களுக்கும் பாரம்பரிய 'கைவிசேடம்' வழங்கப்பட்டதுடன், கிராமிய இல்லத்தை நினைவுபடுத்தும் வகையில் அலங்கரிக்கப்பட்டிருந்தன. 'முட்டி உடைத்தல்', 'தலையணை போர்', தேங்காய் துருவும் போட்டி, தேசிக்காய் கரண்டி ஓட்டம், நெஸ்டமோல்ற்று அருந்தும் போட்டி மற்றும் 'ஊஞ்சல் ஆட்டம்' அடங்கலாக பல்வேறுபட்ட புத்தாண்டுப் போட்டிகளில் பணியாளர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்குபற்றியிருந்தனர்.

---

**பதிப்பாசிரியருக்கான குறிப்பு:**

உலகிலுள்ள மிகவும் பாரிய உணவு மற்றும் பான வகை நிறுவனமாக நெஸ்லே திகழ்ந்து வருகின்றது. உலகெங்கிலும் 189 நாடுகளில் அதன் உற்பத்திகள் கிடைக்கப்பெறுவதுடன், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் மற்றும் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு பங்களிப்பாற்றுதல் ஆகிய நெஸ்லே நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதில் அதன் 328,000 ஊழியர்களும் தீவிர அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர். மக்கள் மற்றும் வளர்ப்பு பிராணிகளின் வாழ்வில் அனைத்து கட்டங்களுக்கும் தேவையான பல்வேறுபட்ட உற்பத்திகள் மற்றும் சேவைகளை நெஸ்லே வழங்கிவருகின்றது. *Nescafé* அல்லது *Maggi* போன்ற சர்வதேச அளவில் பிரபலமான உற்பத்திகள் முதல் *Nestomalt* போன்ற உள்நாட்டில் விரும்பப்படுகின்ற உற்பத்திகள் வரை 2,000 இற்கும் மேற்பட்ட வர்த்தகநாமங்களை அது கொண்டுள்ளது. நிறுவனத்தின் செயல்திறனானது ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் உடல்நலம் ஆகியவற்றின் அடிப்படையிலான அதன் மூலோபாயத்தினால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. 150 ஆண்டுகளுக்கு முன்னர் சுவிட்சலாந்து நாட்டின் வெவே நகரில் ஸ்தாபிக்கப்பட்ட நெஸ்லே, அந்த மாநகரில் தனது தலைமையகத்தைக் கொண்டுள்ளது.

நெஸ்லே லங்கா நிறுவனம், 1906 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் தொழிற்பட்டுவருகின்றது. ஒரு உள்நாட்டு பல்தேசிய நிறுவனமாகத் திகழ்ந்து வருகின்ற நெஸ்லே, பெரும்பாலும் உள்நாட்டிலே பெறப்படுகின்ற மூலப்பொருட்களை உபயோகித்து தனது உற்பத்திகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து வருகின்றது. ஊட்டச்சத்து தொடர்பில் அது கொண்டுள்ள சர்வதேச அளவிலான நிபுணத்தும், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வலையமைப்பு மற்றும் கடுமையான தரக்கட்டுப்பாட்டு நடைமுறைகள் ஆகியவற்றின் பலனாக, இன்று நாட்டில் மிகச் சிறந்த அளவில் நேசிக்கப்படுகின்ற வர்த்தகநாமங்கள் சில அதன் உற்பத்தி வரிசையில் இடம்பெற்றுள்ளன. சந்தை மூலதன மதிப்பைப் பொறுத்தவரையில் கொழும்பு பங்குச் சந்தையில் முதல் நான்கு இடங்களுக்குள் அது இடம் பிடித்துள்ளதுடன், 25,000 இற்கும் மேற்பட்ட பாற்பண்ணையாளர்கள் மற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு பங்களிப்பாற்றி வருகின்றது. நாட்டில் 1 ஆவது ஸ்தானத்திலுள்ள மிகவும் நன்மதிப்புப் பெற்ற உணவு மற்றும் பான வகை நிறுவனமாகவும் அது இனங்காணல் அங்கீகாரத்தைச் சம்பாதித்துள்ளது (2016 ஆம் ஆண்டிற்கான LMD சஞ்சிகையின் மிகவும் நன்மதிப்புக் கொண்ட நிறுவனங்களின் தர வரிசை).

மேலதிக தகவல் விபரங்களுக்கு www.nestle.lk.